உ

சிவமயம்.


திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்றுநாயன்மார்களுள் ஒருவராகிய

விசாரசருமர் என்னும்

# சண்டேசுரநாயனார்

# திவ்வியசரித்திரம்.



இது

இந்துமதாபிமானிகளின் வேண்டுகோளிற் கிணங்கச்

சுருக்கமாகத் தொகுக்கப்பட்டு,

சை. ர. நமசிவாயசெட்டியார் அவர்களால்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---

சர்வதாரி௵ ஐப்பசிமீ

1888.

இதன் விலை பை மூன்று.] [தபாற்கூலி 10 - க்குப் பை. 6.

இவை பின்னர் புத்தகமாக வெளிவரும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பரம். இராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# வடிவுடைமாணிக்கமாலை.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

சீர்கொண்டவொற்றிப் பதிவுடையா னிடஞ்சேர்ந்தமணி
வார்கொண்டகொங்கை வடிவாம்பிகைதன் மலரடிக்குத்
தார்கொண்டசெந்தமிழ்ப் பாமாலைசாத்தத் தமியனுக்கே
யேர்கொண்டநல்லருளீயுங்குணாலய வேரம்பனே.

திருச்சிற்றம்பலம்.

கடலமுதே செங்கரும்பே யருட் கற்பகக்கனியே
யுடலுயிரே யுயிர்க்குள்ளுணர்வே யுணர்வுள் ளொளியே
யடல்விடையா ரொற்றியா ரிடங்கொண்ட வருமருந்தே
நாடலவிழ் ஞானமலரே வடிவுடை மாணிக்கமே. (௧)


அணியே யணிபெறுமொற்றித் தியாகர்தம் மன்புறுசற்
குணியே யெம்வாழ்க்கைக் குலதெய்வமே மலைக்கோன்றவமே
பணியேன் பிழைபொறுத் தாட்கொண்ட தெய்வப்பதிகொள் சிந்தா
மணியே யென்கண்ணுண் மணியே வடிவுடை மாணிக்கமே. (௨)

மானேர் விழிமலைமானே யெம்மானிடம் வாழ்மயிலே
கானேரளகப் பசுங்குயிலே யருட்கரும்பே
தேனே திருவொற்றி மாநகர்வாழுஞ் சிவசத்தியே
வானே கருணைவடிவே வடிவுடை மாணிக்கமே. (௩)

பொருளே யடியர்புகலிடமே யொற்றிப் பூரணன்றன்
னருளே யெம்மாருயிர்க் காந்துணையே விண்ணவர்புகழுந்
தெருளே மெய்ஞ்ஞானத்தெளிவே மறைமுடிச்செம் பொருளே
மருளேத நீக்குமொளியே வடிவுடை மாணிக்கமே. (௪)

திருமாலுநான்முகத் தேவுமுன் னாண்மிகத் தேடிமனத்
தருமா லுழக்கவன லுருவாகி யமர்ந்தருளும்
பெருமானெம்மா னொற்றிப்பெம்மான் கைம்மான்கொளும் பித்தன்மலை
மருமானிடங்கொள் பெண்மானே வடிவுடை மாணிக்கமே. (௫)

உள்ளோரருட்டெய்வங் காணெண்மனத்து முளைக்கப்படாப்
பொன்னேயப்பொன்னற் புதவொளியே மலர்ப்பொன்வணங்கு
மன்னே யெம்மாருயிர்க் கோருயிரே யொற்றியம்பதிவாழ்
மன்னேரிடம்வளர் மின்னேவடிவுடை மாணிக்கமே. (௬)





உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்றுநாயன்மார்களுள்

ஒருவராகிய

# சண்டேசுரநாயனார்

## திவ்வியசரித்திரம்.

சந்தானாசாரியராகிய

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

## புராணசாரம்.

வேதமலிசேய்ஞலூ ரெச்சதத்தன் விளங்கிய
மறைபயிலும் விசாரசன்மர்
மெய் [illegible] மை பெருநதாமே

விளங்கும்பொருட்டுச் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநு
க்கிரகம் என்கின்ற பஞ்சகிர்த்தியங்களையும் செய்வாராகி, ஒருபதி
உண்டு என்பதும், அப்பதிக்கு முற்றறிவுடைமை வரம்பிலின்ப
முடைமை, இயற்கையுணர்வுடைமை, தன்வயமுடைமை, வரம்பி
லாற்றலுடைமை, குறைவிலாற்றலுடைமை என்கின்ற ஆறுகுணங்
களும் இன்றி அமையாதன என்பதும், அக்குணங்களெல்லாம் உ
டைய பதி பரமசிவனே என்பதும் அவர் அத்தொழில் இயற்று
தல்தமது அபின்னபூதியாகிய சிவசத்தியாலாகும் என்பதும், அது
பற்றி அவ்விருவரோ நமக்குப் பரமபிதா மாதாக்கள் என்பதும், அ
வர்களிடத்தேயே நாம் அன்புசெய்யவேண்டும் என்பதும், அவ்வ
ன்பை மற்றோர் பிறவியில் செய்குவமெனின், அதற்குக்கருவியாச்
சிறந்துள்ள இம்மானிடப்பிறவி பெறுதற்கரியது என்பதும, அப்ப
டியாகில் இப்பிறவியிற்றானே இன்னுஞ் சிலநாட்சென்றபின் செய்
குவமெனின் இப்பிறவி நீங்குமவதி அறிதற்கரியது என்பதும், அ
ங்ஙனமாகையால் அவ்வன்பு செய்தற்கேயன்றி மற்றொன்றிற்கும்
சமயமில்லை என்பதும், அது செய்யுமிடத்தும் நமக்கு ஓர் சாமர்
த்தியமுள தெனக்கருதி, அதனை முன்னிடாது திருவருளையே மு
ன்னிட்டு நின்று செய்யவேண்டும் என்பதுமே வேதாகமாதி சமஸ்
தசாஸ்திரங்களானும் துணியப்படும் மெய்ப்பொருள் என்றுசந்தே
கவிப்பிரீதமறத் துணிந்துகொண்டார். அந்த உண்மையாகிய துணி
வுதோன்றவே அவருக்குச் சிவனிடத்தே மெய்யன்பு கலைதோற்றி
வளர்வதாயிற்று.

ஒரு நாள் அவர் தம்மோடு அத்தியயனம் செய்கின்ற பிள்ளை
களோடும் அவ்வூரவர்களுடைய பசுநிரைகளுடன் கூடிச்சென்ற
பொழுது, ஓரீற்றுப் பசு ஒன்று, மேய்ப்பானாகிய இடையனைக் குத
தப்போயிற்று. அவ்விடையன் சிறிதும் பாவத்துக்கு அஞ்சாமல்
அப்பசுவைக்கோலினால் அடித்தான். சாஸ்திரஞானம் உள்ளபடி
அறிந்த விசாரசருமர் அதுகண்டு, மிகுந்த பதைபதைப்போடும்
அவன் சமீபத்திற்சென்று, தீமைபயத்தலின்றி நன்மையே பயத்த
லால்விவேகிகளால் பாவமென்று சிறிதும் இகழப்படாது, பெரும்பு
ண்ணியமென நன்கு மதிக்கப்படுகின்ற மகாகோபங்கொண்டு, பின்
னும் அடியாதபடி அவனைத் தடுத்துநின்று, பசுக்களின் வரலாற்
றையும், அவைதரும் பஞ்சகவ்வியங்கள் சிவனுக்கு அபிஷேகஞ்
செய்தற்கு உபயோகித்தலையும், சைவசாதனமாகிய விபூதிக்கு
மூலம் அவற்றின் சாணமாதலையும் சிந்தித்து, அந்தப்பசுக்களைத்
தாமே மேய்க்கும்படி விரும்பி, அவ்விடையனைநோக்கி, இந்தப்பசு
நிரையை இனி நீ மேய்க்கவேண்டியதில்லை; நானே மேய்ப்பேன்
என்றார். இடையன் அதைக்கேட்டுப்பயந்து கும்பிட்டுக்கொண்டு
போய்விட்டான். விசாரசருமர் பசுக்களை அவ்வவற்றிற்குரிய பிரா
மணர்களின் சம்மதிபெற்றுத் தினந்தோறும் மண்ணியாற்றங்கரை

யில் இருக்கின்ற காடுகளிலும், வயலோரங்களிலும, புல்லுநிறைந்
திருக்கும் இடத்திற்கொண்டுபோய், வேண்டுமட்டும் மேயவிட்டும்
தண்ணீரூட்டியும வெய்யிலெறிக்கும்பொழுது நிழலிருக்குமிடங்
களிலே செலுத்தியும நன்றாகக்காப்பாற்றி, சமித்துகள் ஒடித்துக்
கொண்டு, அஸ்தமயனத்துக்குமுன் அந்தந்தப்பசுக்களை அவரவர்
வீட்டுக்கு ஓட்டிக்கொண்டுபோய்விட்டு, தம்முடைய வீட்டுக்குப்
போவார்.

இப்படிச்செய்யுங்காலத்திலே பசுநிரைகளெல்லாம் அழகோ
டு மிகப்பெருகி, போசனபானங்களிலே குறைவில்லாமல் மகிழ்ச்
சியடைந்து, இராப்பகல் மடிசுரந்து, பாலை மிகப்பொழிந்தன. பிரா
மணர்கள் நித்திய ஓமாகுதியின்பொருட்டு விட்டிருக்கின்ற தங்கள்
பசுக்கள் விசாரசருமர் மேய்க்கத்தொடங்கியபின் முன்னிலும் அ
திகமாகப்பால் கறக்கக்காண்கையால் மிகுந்த சந்தோஷத்தை அ
டைந்தார்கள். பசுக்கள் எல்லாவகை யுபசரிப்பினாலும் அளவிறந்த
களிப்பை அடைந்து, வீட்டிலே கட்டப்பட்டிருக்கின்ற தங்கள் கன்
றுகள் பிரிந்தாலும் சிறிதும் வருத்தமுறாதவைகளாகி, மிகுந்த அ
ன்போடு தங்களை மேய்க்கின்ற விசாரசருமர் சற்றாயினும் பிரிவா
ராகில் அப்பிரிவாற்றாமல் தாய்போல உருகி, அவர் சமீபத்திலே
சென்று கனைத்து, மடிசுரந்து, ஒருவர் கறக்காமல் தாமேபால்பொழி
யும். அதுகண்ட விசாரசருமர் அப்பால் பரமசிவனுக்குத் திரு
மஞ்சனமாந் தகுதியுடைமையை நினைந்தார். நினைக்கவே அவருக்
குச் சிவார்ச்சனையினிடத்தே அத்தியந்த பிரியம்உண்டாயிற்று.
உடனே அவர் மண்ணியாற்றின்கரையிலிருக்கின்ற ஒரு மணற்றி
ட்டிலே ஆத்திமரத்தின்கீழே மணலினாலே ஒரு சிவலிங்கங் குவித்
து, கோயிலும் கோபுரமும் மதிலும் வகுத்து, ஆத்திப்பூமுதலிய
புஷ்பங்களும் பத்திரங்களும் பறித்துப் பூங்கூடையிலிட்டுக்கொண்
டுவந்து வைத்துவிட்டு, புதியகுடங்களைத்தேடி வாங்கிக்கொண்டு
வந்து கறவைப்பசுக்கள் ஒவ்வொன்றினிடத்திலும் சென்று முலை
யைத்தீண்டினார். அவைகள் கனைத்துப பாலைப்பொழிந்தன. பாலி
னாலே நிறைவுற்ற அக்குடங்களைக்கொண்டுபோய் ஆலயத்திலே
வைத்து, பத்திரபுஷ்பங்களால் சுவாமியை அருச்சித்து, பாலினால்
அபிஷேகஞ் செய்தார். பரமசிவன் அவ்விலிங்கத்தினின்று அவ்வி
சாரசருமர் அன்போடுசெய்யும அருச்சனையை அங்கீகாரம் செய்
தருளினார். விசாரசருமர் சிவபூசைக்கு அங்கமாகிய திருமஞ்சனம்
முதலிய பொருள்களுள், கிடையாதவைகளை மானசமாகக் கிடை
த்தனவாகக்கொண்டு, நிறைவுசெய்து, விதிப்படி அருச்சித்து, வண
ங்கிவந்தார். பசுக்கள் அபிஷேகத்தின்பொருட்டு அவ்விசாரசருமர்
கொண்டுவரும் குடங்கள் நிறையப் பாலைச்சொரிந்தும், பிராமண
ர்க்கும் முன்போலக் குறைவுதீரப் பாலைக்கொடுத்துவந்தன. இப்
படி நெடுநாளாகப் பார்ப்பவர்களுக்கு விளையாட்டுபோலத் தோன்

றுகின்ற சிவார்ச்சனையைச்செய்து வரும்பொழுது, அதைக்கண்டமூடன்ஒருவன் அதின உண்மையை அறியாதவனுகி,அதை அவ்வூர்ப் பிராமணர்களுக்குத் தெரிவித்தான். அவர்கள் அதைச்சபையாருக்குத் தெரிவிக்க, சபையார் எச்சதத்தனை அழைத்து,பிராமணர்கள் ஓமாகுதியின் பொருட்டுப் பால்கறக்கும் பசுக்களை எல்லாம் உம்முடைய புத்திரனுகியவிசாரசருமன் அன்புடனே மேய்ப்பவன் போலக்கொண்டுபோய்ப் பாலைக்கறந்து வீணுக மணலிலேசொரிந்து விளையாடுகிறுன் என்றூர்கள். எச்சதத்தன் அதைக்கேட்டுப் பயந்து,சிறுபிள்ளையாகிய விசாரசருமன்செய்கின்ற இந்தச்செய்கையை இதற்குமுன் நான் சிறிதாயினும் அறிந்திலேன். அக்குற்றத்தை நீங்கள் பொறுத்துக்கொள்ளவேண்டும் என்று குறையிரந்து வணங்கி,இனி அவன் அப்படிச்செய்வானுயின் அக்குற்றம என்மேலதாகும் என்றுசொல்லி அச்சபையாரிடத்திலே அனுமதிபெற்றுக் கொண்டு வீட்டுக்குபபோய்விட்டான்.

மறுநாட் காலையில அந்தச்சமாசாரத்தைச் சோதித்தறிய விரும்பி, விசாரசருமா பசுமேய்க்கப்போனபின்பு, அவர் அறியாதபடி அவர்பின்னே சென்றுன். விசாரசருமர் பசுக்களை ஓட்டி, மண்ணியாற்றின் மணற்றிட்டிலே கொண்டுபோனதைக்கணடு, எச்சதத்தன் அருகில் இருந்த ஒரு குராமரத்தில் ஏறி,அங்கே நிகழ்வதை அறியுமபடி ஒளித்திருந்தான். விசாரசருமர் ஸ்நானம்பண்ணி போல மணலினுலே கோயிலும சிவலிங்கமும் செய்து, பத்திரபுஷ்பங்கள் பறித்துக்கொண்டு வைத்து, பின்பு பாற்குடங்களைக்கொண்டுவந்து தாபித்து, அருச்சனைக்குவேண்டிய பிறவற்றையும் அமைத்து, மிகுந்த அன்பினேடு பூசைக்கு ஆரம்பித்து, சிவலிங்கத்துக்குப் பத்திரபுஷ்பங்களைச்சாத்தி, பாற்குடங்களை எடுத்து அபிஷேகம பண்ணினுர், குராமரத்தில ஏறியிருநத எச்சதத்தன் அதைக்கண்டு மிகுந்த கோபங்கொண்டு,சீக்கிரமாக இறங்கிப்போய்த் தன்கையிலிருக்கிற தண்டினுல் அவ்விசாரசருமருடைய முதுகிலே அடித்துக் கொடுஞ்சொற்களைச்சொல்ல அவருடைய மனம் பூசையிலேயே முழுதும பதிந்து கிடந்தமையால் அது அவருக்குப் புலப்படவில்லை. பின்னும் எச்சதத்தன் கோபங்கொண்டு பலமுறையடிக்க விசாரசருமர் அவ்வடியாலாகிய வருத்தந்தோன்றப் பெருதவராகி, அபிஷேகத் திருத்தொண்டினின்றுந் தவறுதிருநதார்.

அவருடைய உள்ளன்பை அறியாத எச்சதத்தன் மிகக்கோபித்து திருமஞ்சனப் பாற்குடத்தைக் காலினுற் இடறிச்சிந்தினுன். உடனேவிசாரசருமர் அதைக்கண்டு,அதுசெய்தவன் பிதாவும்பிராமணனும் குருவுமாகிய எச்சதத்தனென்பதை அறிந்தும் அவன் செய்தது அதிபாதகமாகிய சிவாபராதமாதலால அவன் காலைத்துணிக்கக்கருதித் தமக்குமுன்கிடந்த ஒருகோலை எடுக்க, அது மழுவாயிற்று. அதினுலே அவன்கால்களை வெட்டினுர். சிவபூசைக்கு

வந்த அவ்விடரை நீக்கினவராகிய விசாரசருமர் முன்போல அருச்சனைசெய்ய பரமசிவன் உமாதேவியோடும் இடபாரூடராய்த் தோன்றியருளினார். விசாரசருமர் அதுகண்டு மனங்களித்து, விழுந்து நமஸ்கரித்தார். பரமசிவன் அவரைத் தம்முடைய திருக்கரங்களில் எடுத்து, நீ நம்பொருட்டு உன்னைப்பெற்ற பிதாவை வெட்டினாய். இனி உனக்கு நாமே பிதா என்று அருளிச்செய்து அவரை அணைத்து அவருடைய சரீரத்தைத்தடவி உச்சிமோந்தருளினார். சிவனுடைய திருக்கரத்தினாலே தீண்டப்பட்ட அவ்விசாரசருமருடையதிருமேனிசிவமயமாகித்திவ்வியபிரகாசத்தோடுவிளங்கிற்று. பரமசிவன்நாம் நம்முடையதொண்டர்களுக்கெல்லாம்தலைவனாக்கி, நாம் ஏற்றுக்கொண்ட அமுதும் பரிவட்டமும் புஷ்பமும் உனக்கே கிடைக்குமபடி சண்டேசுரபதத்தைத் தந்தோம்என்று திருவாய் மலர்ந்து, தம்முடைய சடையிலே தரித்திருக்கின்றகொன்றைமாலையை எடுத்து அவருக்குச்சூட்டியருளினார். அவ்விசாரசருமர் சமஸ்ததேவர்களும் ஆரவாரிக்கவும், எவ்விடத்தும் புஷ்பம்பொழியவும், சிவகணங்கள் பாடியாடிக் களிகூறவும், வேதங்கள் கோஷிக்கவும், நானாவிதவாத்தியங்கள் முழங்கவும், சற்சமயமாகிய சைவசமயம் நிலைபெறும்படி, பரமசிவனைக்கும்பிட்டு அவராலே தரப்பட்டசண்டேசுரபதத்தை அடைந்தார். எச்சதத்தர் சிவத்துரோகஞ்செய்தும் சண்டேசுரநாயனாராலே தணடிக்கப்பட்டு அக்குற்றம் நீங்கிச் சுற்றத்துடன் சிவலோகத்தை அடைந்தார். சுபம்! சுபம்!!


சண்டேசுரநாயனார்முத்தியடைந்தநாள்:—

தைமாூ உத்திரநக்ஷத்திரம்.

சண்டேசுரநாயனார்

திவ்வியசரித்திரம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாசவள்ளலார் என்னும்

சிதம்பரம்

# இ ராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# ஸ்ரீ சிவஷண்முகநாம ஸங்கீர்த்தனலஹரி

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பழுதுநேர்கின்ற வஞ்சகர்கடைவாய்ப் பற்றிநின்றதிற் பயனெதுகண்டாய், பொழுதுபோகின்ற தெழுதியென்னெஞ்சே பொழில்கொளொற்றியம் புரிதனக்கேகி, தொழுதுசண்முக சிவசிவவெனநந் தோன்றலார்தமைத் துதித்தவர்திருமுன், பழுதுசொல்லுதுமையுறலென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (க)

சூதுநேர்கின்ற முலைச்சியர்பொருட்டாச் சுற்றிநின்றதிற் சுகமெதுகண்டாய், போதுபோகின்ற தெழுதியென்னெஞ்சேபொழில்கொளொற்றியம்புரி தனக்கேகி, யோதுசண்முக சிவசிவவெனவேயுன்னிநெக்குவிட்டுருகி நந்துயரா, மாதுசொல்லுதுமையுற லென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (உ)

ஞாலஞ்செல்கின்ற வஞ்சகர்கடைவாய் நண்ணிநின்றதினலமெதுகண்டாய், காலஞ்செல்கின்ற தெழுதியென்னெஞ்சே கருதுமொற்றியங்கடி நகர்க்கேகிக், கோலஞ்செய் யருட்சண்முகசிவவோங் குழகவோவெனக்கூவி நந்துயரா, மாலஞ்சொல்லுதுமையுறலென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (ங)

மருட்டிவஞ்சக மதித்திடுங்கொடியார் வாயல்காத்தின்னும் வருந்திலென்பயனோ, விருட்டிப்போகின்ற தெழுதியென்னெஞ்சே யெழில்கொளொற்றி யூரொனுந்தலத்தேகித், தெருட்டிறஞ்செயுஞ் சண்முகசிவவோஞ் சிவநமாவெனச் செப்பிநந்துயரா, மரிட்டையோது துமையுறலென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (ச)

இலலையென்பதே பொருளெனக்கொண்டோ ரீனவாயிலிலிடர்ப்படுகின்றூ, யெலலைசெல்கின்ற தெழுதியென்னெஞ்சே யெழில்கொளொற்றி யூரொனுந்தலத்தேகித், தொல்லையோஞ்சிவ சண்முகசிவவோந்தூயவென்றடி தொழுதுநாமுற்ற, வல்லலேோது துமையுறலென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (ரு)

கரவுநெஞ்சினர் கடைத்தலைக்குழன்றாய் கலங்கியின்னுநீகலுழ்ந்திடிற்கடிதே, யிரவுபோந்திடு மெழுதியுன்னெஞ்சே யெழில்கொளொற்றி யூரொனுந்தலததேகிப், பரவுசண்முக சிவசிவசிவவோம் பரசுயமபுசங்கர சம்புநமவோ, மரவென்றேத்து மையுறலென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (சு)

ஏய்ந்துவஞ்சகர் கடைத்தலைவருந்தி யிருக்கின்றாயினிச்சிறுபொழுதுஞ், சாய்ந்துபோகின்ற தெழுதியென்னெஞ்சே தகைகொளொற்றியந் தலத்தினுக்கேகி, வாய்ந்தசண்முக நமசிவசிவவோம் ஓரதயம்புசங்கர சம்புவெனவே, யாய்ந்துபோற்று துமையுறலென் லாணைகாணவ ரருள்பெறலாமே. (எ)

சோர்ந்தநெஞ்சின ரிடந்தனிலிருந்தே யிடர்கொண்டாயினிச் சிறுபொழுதும், பேர்ந்துபோகின்ற தெழுதியென்னெஞ்சே பிறங்குமொற்றியம் பெருநகர்க்கேகி, யோர்ந்துசண்முக சரவணபவவோமோஞ்சுயம்பு சங்கரசம்புவெனவே, யார்நதுபோற்று துமையுறலென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (அ)

கமைப்பினீசிலா வஞ்சகர்கடையைக் காத்திருக் கலைகடுகியிப்பொழுது, மிமைப்பிற்போகின்ற தெழுதியென்னெஞ்சே யெழில்கொளொற்றி யூரொனுந்தலத்தேகி, யெமைப்புரந்தசணமுக சிவசிவவோமிறைவ சங்கரவரகரவெனவே, யாாந்துபோற்று துமையுறலென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (கூ)

உறைந்துவஞ்சகர்பால் குறையிரந்தவமே யுழல்கின்றாயினியுளைக்குமிப்பொழுதுங், குறைந்துபோகின்ற தெழுதியெனனெஞ்சே குலவுமொற்றியங்கோ நகர்க்கேகி, நிறைந்தசண்முக குருநமசிவவோ நிமலசிற்பரவர கரவெனவே, யறைந்துபோறறு துமையுறலென்மே லாணைகாணவ ரருள்பெறலாமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

கண்ணே யக்கண்ணின்மணியேமணியிற்கலந் தொளிசெய்
விண்ணேவியவொற்றியூ ரண்ணல்வாமத்தில வீற்றிருக்கும்
பெண்ணேமலைபெறும் பெண்மணியேதெய்வப் பெண்ணமுதே
மண்ணேயநித்தவர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (௭)

மலையான்றவஞ்செய்து பெற்றமுத்தேயொற்றி வாழ்கனகச்
சிலையான்மணக்க மணக்குந்தெய்வீகத் திருமலரோ
யலையான்மலிகடற் பள்ளிகொண்டோன்றொழு மாரமுதே
மலையானருமை மகளேவடிவுடை மாணிக்கமே. (௮)

காமம்படர்நெஞ் சுடையோர்கனவினுங் காணப்படாச்
சேமம்படர்செல்வப் பொன்னேமதுரச் செழுங்கனியே
தாமம்படரொற்றியூர்வாழ்பவளத் தனிமலையின்
வாமம்படர்பைங்கொடியே வடிவுடைமாணிக்கமே. (௯)

கோடாவருட்குணக் குன்றேசிவத்திற் குறிப்பிலரை
நாடாதவானந்த நட்பேமெய்யன்பா நயக்குமின்பே
பீடாதிருவொற்றிப் பெம்மானிடஞ்செய் பெருந்தவமே
வாடாமணிமலர்க் கொம்பேவடிவுடை மாணிக்கமே. (௧௦)

நாலேயெனுமறையர் தங்களின்னமு நாடியெனைப்
போலேவருந்த வெளியொளியாயொற்றிப் புண்ணியர்தம்
பாலேயிருந்த நினைத்தங்கையாகப் பகரப்பெற்ற
மாலேதவத்திற் பெரியோன்வடிவுடை மாணிக்கமே. (௧௧)

சங்கைகொண்டோனொற்றி யூரண்ணல்வாமங்கலந்தருள்செய்
நங்கையெல்லாவுலகுந் தந்தநின்னையந் நாரணற்குத்
தங்கையென்கோவன்றித் தாயென்கோசொற் றழைக்குமலை
மங்கையங்கோமள மானேவடிவுடை மாணிக்கமே. (௧௨)


சோலையிட்டார்வயலூ ரொற்றிவைத்துத் தன்றொண்டரன்பின்
வேலையிட்டாற்செயும் பித்தனைமெய்யிடை மேவுகரித்
தோலையிட்டாடுந் தொழிலுடையோனைத் துணிந்துமுன்றண்
டாலையிட்டாயெந் தென்னேவடிவுடை மாணிக்கமே. (௧௩)

தனையாள்பவரின்றி நிற்கும் பரமன்றனியருளாய்
வினையாளுயிர்மல நீக்கிமெய்வீட்டின் விடுத்திடுநீ
யெனையாளருளொற்றியூர் வாழ்வன்றன்னிடத்துமொரு
மனையாளெனநின்ற தென்னேவடிவுடை மாணிக்கமே. (௧௪)

பின்னின்றபிள்ளையின் மேலார்வந்தாய்க்கெனப் பேசுவர்நீ
முன்னின்றபிள்ளையின மேலாசையுள்ளவா மொய்யசுரர்
கொன்னின்றபோர்க் கிளம்பிள்ளையையேவக் கொடுத்ததென்னே
மன்னின்றவொற்றி மயிலேவடிவுடை மாணிக்கமே. (௧௫)

பையாளுமல்குற் சுரர்மடவார்கள் பலருமிச்
செய்யாளும்வெண்ணிற மெய்யாளுமெத்தவஞ் செய்தனரோ
கையாளுநின்னடிக் குற்றேவல்செய்யக் கடைக்கணித்தாய்
மையாளுங்கண்ணொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (௧௬)

(இன்னும்வரும்.)



திருநாளைப்போவார்நாயனார்.



மூர்த்திநாயனார்.